**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்**

**இரண்டாம் தவணைப்பரீட்சை – 2019**

**தரம் - 10** **புவியியல் I,II** **நேரம் :- மூன்று மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் :-10 நிமிடம்** **சுட்டெண்:................................**

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## புவியியல் I

- இவ்வினாத்தாள் **40** வினாக்களைக்கொண்டுள்ளது.
- ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப **எல்லா** வினாக் களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

- 1தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1. உயிர்க்கோளம் நிலைத்திருப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் ஓசோன் படையானது வளிமண்டலக் கட்டமைப்பில் …………….. கிலோமீற்றருக்கு இடையில் அமைந்துள்ளது.
   (20-50, 20-30, 5-6)
2. புவியோட்டில் சீயல் படை என அழைக்கப்படும் கண்ட ஓடானது ………………… பாறையை அதிகளவில் கொண்டுள்ளது. (கருங்கல், பசோல்ட், எரிமலைக்குழம்பு)
3. புவியின் மொத்த நிலத்திணிவில் 29.5% ஐ கொண்டுள்ள ……………… உலகில் மிகப் பெரிய கண்டமாக இனங்காணப்பட்டுள்ளது. (ஆபிரிக்கா, ஆசியா, அவுஸ்திரேலியா)
4. …………………….. பசுபிக் சமுத்திரத்துடன் இணைவைக் கொண்டதாக அமைந்துள்ளது. (சீனக்கடல், யப்பான்கடல், மஞ்சள்கடல்)
5. உலகில் அதிகளவு உற்பத்தி செய்யப்படுவதும், நுகரப்படுவதுமான தானியவகைகளுள் ……………….. மிகவும் முக்கியமானதாக உள்ளது. (நெல், கோதுமை, சோளம்)
6. உலகில் இடைவெப்ப வலயத்தில் அமைந்துள்ள பகுதிகளில் …………….. அதிகளவில் பரம்பிக் காணப்படுகின்றன. (நெற்பயிர்கள் , பாற்பண்ணைகள், இறப்பர்ப்பயிர்கள்)
7. இலங்கையில் அமைந்துள்ள செம்பூரான் மண் ………….. பயிர்ச்செய்கையின் வளர்ச்சிக்கு மிகவும் சாதகமான காரணியாக அமைந்துள்ளது. (தேயிலை, இறப்பர்,தென்னை)
8. இலங்கையின் ……………….. மாவட்டத்தில் புதிய நிலங்களில் இறப்பர் பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம்)



(பக்கம் 2 ஐப் பார்க்கவும்)

9. உலகில் இலத்திரனியல் கைத்தொழில் உற்பத்தியில் தற்போது ………… நாடு முதன்நிலை வகித்து வருகின்றது. (யப்பான், சீனா, ஐக்கிய அமெரிக்கா)

10. இலங்கை முழுவதையும் …………… பகுதிகளாக்கி 1:50,000 அளவுத்திட்டத்தில் மெற்றிக் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. (72, 92, 82)

- 11தொடக்கம் 15 வரை தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் **'ச'** யையும் பிழையாயின் **'பி'** யையும் **சுற்றி வட்டம் வரைக.**

11.கி.பி1950ஆம் ஆண்டில் மோட்டார் வாகன உற்பத்தியில் ஐக்கிய அமெரிக்கா முதலிடம் பெற்றது மட்டுமன்றி இன்றும் அந்நாடே முதன்நிலையிலுள்ளது. **ச/பி**

12.வளிமண்டலத்தில் உயரத்துக்கு ஏற்ப வெப்பநிலை வீழ்ச்சியடைந்து செல்வது மாறன் மண்டலத்தில் அவதானிக்கக் கூடிய விசேட பண்பாகும். **ச/பி**

13.இலங்கையில் சேதன உரப்பாவனையை ஊக்கிவிக்கும் நோக்கில் குருநாகல் மாவட்டத்தில் மாகன்துர, கொணவலவில் சேதன உர மத்திய நிலையம் நிறுவப்பட்டது. **ச/பி**

14.ஆசியாக் கண்டமேடைக்குள் மடகஸ்கார் தீவு அமைவு பெற்றுள்ளது. **ச/பி**

15.சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரில் அமைவு பெற்றுள்ளது. **ச/பி**

- **16** தொடக்கம் **20**வரையுள்ள வினாக்களுக்கு **'அ'** மற்றும் **'ஆ'** என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. **'அ'** நிரலில் உள்ள தகவல்களுடன் **'ஆ'** நிரலைப் பொருத்திப்பார்க்கும் போது சரியான ஒழுங்கினைக்காட்டும் விடைக்குரிய **இலக்கத்தினை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

16.

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| **பிரதான சமுத்திரங்கள்** | **அமைந்துள்ள தீவுகள்** |
| 1. பசுபிக்சமுத்திரம் | A- பிரித்தானியா |
| 2. இந்துசமுத்திரம் | B- யப்பான் |
| 3. அத்திலாந்திக்சமுத்திரம் | C- சீசெல்ஸ் |
| | D- கிறீன்லாந்து |

1. BCA 2. BAD 3. ABC 4.ADB (…….)

17.

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| **விவசாயப் பயிர் வகைகள்** | **ஏற்றுமதிக் கிராமங்கள்** |
| 1. முந்திரி | A- கட்டுக்கம்பொல |
| 2. வெற்றிலை | B- குருநாகல் |
| 3. மிளகாய் | C- தம்பதெனியா |
| | D- ராஜாங்கனை |

1. CAB 2. CBA 3. CAD 4.CAB (…….)



(பக்கம் 3 ஐப் பார்க்கவும்)

18.

| 'அ' உலகின் நதிகள் | 'ஆ' உற்பத்தியாகும் இடங்கள் |
|---|---|
| 1. தேம்ஸ் நதி | A - ஏரி |
| 2. நைல் நதி | B - உருகியபனி |
| 3. றைன் நதி | C - ஊற்று |
| | D – மலை |

1. CBD 2. CBA 3. CAD 4.CAB (…….)

19.

| 'அ' வளிமண்டலக் கட்டமைப்பு | 'ஆ' செயற்பாடுகள் |
|---|---|
| 1. மாறன் மண்டலம் | A – மின்னியக்கம் |
| 2. படை மண்டலம் | B – படிவுவீழ்ச்சி |
| 3. இடை மண்டலம் | C – விண்கற்கள் எரிதல் |
| | D – முகில் உருவாக்கம் |

1. BAC 2. BCA 3. BCD 4.BAD (…….)

20.

| 'அ' கைத்தொழில் நாடுகள் | 'ஆ' உற்பத்தி மையங்கள் |
|---|---|
| 1. ஐக்கிய அமெரிக்கா | A – டோக்கியோ |
| 2. ஐக்கிய இராச்சியம் | B – டெற்றொயிட் |
| 3. யப்பான் | C - லங்காசயர் |
| | D – குட்நெட்ஸ் |

1. DCB 2. DCA 3. BCD 4.BCA (…….)

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்களில் உள்ள **வெற்றிடங்களை பொருத்தமான** சொற்களைக் கொண்டு நிரப்புக.

21.பூகோள வெப்பநிலை அதிகரிப்பினால் அயன மண்டல நாடுகளில்…………………………………. .ப்புடவைகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

22.……………… நாட்டில் காட்டுப்பயிராகக் காணப்பட்ட இறப்பர் பின்னர் பெருந்தோட்டப்பயிராக பயிரிடப்பட்டது.

23.இலங்கையின் தென்பகுதியில் …………… மித்தெனிய, தங்கல்ல ஆகிய பிரதேசங்களை இணைக்கும் பகுதி சிறுதெங்கு முக்கோணவலயம் எனப்படும்.


24.வளிமண்டலத்தில் ……………………. வாயு அதிகூடிய சதவீதத்தில் அமைந்துள்ளதுடன் தாவர வளர்ச்சிக்கும் அவசியமானதாகும்.

25.உலகில் கி.பி. 2009-2010 ஆம் ஆண்டுகளின் காலப்பகுதியிலும் இன்றும் அதிகளவில் கோதுமையை உற்பத்திசெய்வது ………….. நாடு ஆகும்.



(பக்கம் 4 ஐப் பார்க்கவும்)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைத் தரப்பட்ட **இலங்கைப் படத்தினைப்** பயன்படுத்தி பூரணப்படுத்துக.




26.பல்தேசியக் கம்பனியின் உதவியுடன்..........என்ற எழுத்துக் குறிக்கும் இடத்தில் இறால் வளர்க்கப்பட்டு அவை ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

27.நெல் ஆராய்ச்சி நிலையமான பத்தலேகொட என்ற இடத்தினை ............. என்ற எழுத்து குறித்து நிற்கின்றது.

28.**B** என்ற எமுத்துக் குறிப்பது சிறுஏற்றுமதிப்பயிர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள .................. பிரதேசமாகும்

29.புதிய பசு, புல் இனங்களை அறிமுகப்படுத்தும் அம்பேவல ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் .......... என்ற எமுத்தினால் குறிக்கப்பட்டுள்ளது.

30.சிறு ஏற்றுமதிப்பயிர்களில் ஒன்றான முந்திரி பயிர்ச்செய்கை நடைபெறுகின்ற பிரதேசம் .......... என்ற எழுத்தினால் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

- **31** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் **இலக்கத்தினை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

31.உலகின் மொத்த நீர்ப்பரம்பலில் மனிதனுக்குப் பயன்படக்கூடிய நீரின் அளவு எத்தனை வீதமாகும்.

1. 97.5%    2. 2.5%    3. 1%    4. 8%    (......)

32.இலங்கை அரசாங்கம் விவசாயிகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு உருவாக்கிய செயற்றிட்டம் எது?

1. உரமானியம் வழங்கல்    2. ஓய்வூதியத்திட்டம்
3. மீள்நடுகை மானியம்    4. ஏற்றுமதி வரிச்சலுகை    (......)

33. * 1900-5460mm மழைவீழ்ச்சி    * $15^{o}C$ -$27^{o}C$ வரையான வெப்பநிலை
* மென்சாய்வான நிலப்பகுதி,    * களித்தன்மையான செம்பூரான்மண்

மேலே உள்ள பௌதிகக்காரணிகள் உலகில் எந்தப் பயிர்ச்செய்கைக்கு சாதகமானதாகும்.

1. நெல்    2.இறப்பர்    3.தேயிலை    4.தென்னை    (......)

34.கடகக் கோட்டிற்கும், மகரக்கோட்டிற்கும் இடையே தேசமாக அமைந்துள்ள தீவுகளில் ஒன்று.

1. யப்பான்தீவு    2.ஹவாய்த்தீவு    3.இலங்கைத்தீவு    4.தஸ்மானியாத்தீவு (.....)



(பக்கம் 5 ஐப் பார்க்கவும்)

❖ **35** மற்றும் **36** ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக

A. பாலைவனமாதல்

B. விவசாயநிலப்பயன்பாடு

C. விலங்குவேளாண்மை

D. சேதனப்பசளை

E. போசாக்குமட்டம்

35.ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பானது இன்னொரு காரணியில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதைக் குறித்துக்காட்டும் கூற்றுக்களைக்கொண்ட இரு எழுத்துக்களை உள்ளடக்கிய விடை

1.A மற்றும் B ஆகும் 2.B மற்றும் E ஆகும்

3.B மற்றும் C ஆகும் 4.C மற்றும் E ஆகும் (…...)

36.ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பானது இன்னொரு காரணியில் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதைக் குறித்துக்காட்டும் கூற்றுக்களைக்கொண்ட இரு எழுத்துக்களை உள்ளடக்கிய விடை

1.A மற்றும் E ஆகும் 2.B மற்றும் D ஆகும்

3A மற்றும் B ஆகும் 4.C மற்றும் E ஆகும் (…...)

37.சிறு ஏற்றுமதிப்பயிரை மேம்படுத்துவதற்காக சிறு ஏற்றுமதிப் பயிர் திணைக்களம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது.

1. கி.பி 1960 2. கி.பி 1972 3. கி.பி 1977 4.கி.பி1992 (…...)

38.உயிர்க்கோளத்தின் சமநிலையப் பாதிப்படையச் செய்வனவற்றுள் மனித செயற்பாடாகக் கருத **முடியாதது** எது?

1.நகரமயமாக்கல் 2.கைத்தொழில் 3.காட்டுத்தீ 4.காடழித்தல் (…...)

39.ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ள உள்நாட்டுக் கடல்களை சரியாக கொண்டமைந்திருப்பது எது?

1. செங்கடல்,சாக்கடல் 2. கஸ்பியன்கடல், கருங்கடல்
3. வடகடல்,யப்பான்கடல் 4. கஸ்பியன்கடல்,ஏரல்கடல் (…...)

40.இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்தியவர்.

1. சேர் ஹென்றி விக்ஹாம் 2. ஜேம்ஸ் டெய்லர்
3. தோமஸ் மெயிட்லண்ட் 4. ஜோர்ச் பரட் (…...)

(40x1=40 புள்ளி)



(பக்கம் 6 ஐப் பார்க்கவும்)

**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்**

**இரண்டாம் தவணைப்பரீட்சை – 2019**


**தரம் - 10** **புவியியல் I,II** **சுட்டெண்………………..**

## புவியியல் II

- இவ்வினாத்தாள்; **I,II** என்னும் **இரண்டு** பகுதிகளைக்கொண்டுள்ளது
- பகுதி I இல் உள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- பகுதி II இல் இருந்து **நான்கு** வினாக்களிற்கு விடை எழுதுதல் வேண்டும்.
- எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு **விடை எழுத வேண்டும்.**

## பகுதி I

**1) (அ)** தரப்பட்ட **1:50,000** இடவிளக்கப்படத்தின் மாதிரியை பரிசீலித்து பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




**1:50,000**



( பக்கம் 7 ஐப் பார்க்கவும்)

i. மேலே உள்ள இடவிளக்கப் படத்தின் வெளி எல்லையின் கீழ் ஓரத்தில் காட்டப் பட்ட தகவல் எது? (பள்ளத்தாக்கு, அளவுத்திட்டம், படத்தின் பெயர்)

ii. A –B குறிக்கும் பௌதீக அம்சம் எது? (பள்ளத்தாக்கு, சுவடு, கணவாய்)

iii. Oஎன்ற எழுத்தினால் குறித்துக்காட்டப்படும் அம்சம் எது? (பிரதான சமஉயரக்கோடு, இடைச் சமஉயரக்கோடு, சம ஆழக்கோடு)

iv. G—H குறிக்கும் பௌதீக அம்சம் எது? (மென்சாய்வு, குத்துச்சாய்வு, குழிவுச்சாய்வு)

v. படத்தில் எந்த எழுத்தினால் காட்டப்பட்ட இடத்தில் படத்தின் பெயர் அச்சிடப்பட்டிருக்கும்? (X, Y, Z)

vi. E—F எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் பௌதிக அம்சம் எது? (உயர் கணவாய், தாழ்கணவாய், சமவெளி)


vii. கரையோர அம்சங்களில் ஒன்றான முனையை குறித்துக்காட்டும் எழுத்து எது? (P, Q, S)

viii. படத்தில் **Z** என்ற எழுத்தினால் காட்டப் பட்டிருக்கும் தகவல் எது? (படத்தின் வகை, படத்தின் இலக்கம், படத்தின் பெயர்)

ix. I –J குறிக்கும் பௌதீக அம்சம் எது? (கூம்புக்குன்று, நீள்குன்று, பாறைத்தொடர்)

x. படத்தில் காட்டப்பட்ட அளவுத்திட்டத்தின்படி ஒரு கிலோமீற்றர் தூரம் எத்தனை சென்ரிமீற்றரில் காட்டப்படும்? (1cm, 2 cm , 4 cm) (10X1=10 புள்ளிகள்)

**(ஆ)** உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் புற உருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.






(பக்கம் 8 ஐப் பார்க்கவும்)

➢ (i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கு முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. உலகப்படத்திலிருந்து ஒவ்வொருவினாவுக்குரிய சரியான விடையைக் குறித்துக்காட்டும் எழுத்தினைத் தெரிவு செய்து எழுதுக.

i. ஆந்தீஸ் மலைத்தொடர் - A,B,C


ii. மடகஸ்கார் - D,E,F

iii. பாற்பண்ணை உற்பத்தியில் ஈடுபடும் டென்மார்க் நாடு – G,H,I

iv. ஜம்பெரும் வாவி - J,K, L

v. வடகடல் - M,N, O (5X1=5புள்ளிகள்)

**(இ)** உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் புற உருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.






(பக்கம் 9 ஜப் பார்க்கவும்)

- (i) தொடக்கம்(v)வரையுள்ள ஒவ்வொருவினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. இலங்கைப் படத்திலிருந்து ஒவ்வொரு வினாவுக்குரிய சரியான விடையைக் குறித்துக்காட்டும் எழுத்தினைத் தெரிவு செய்து எழுதுக.

i. உயர் நிலத்தேயிலை பயிரிடப்படும் நுவரெலியா -A, B,C

ii. சிறு ஏற்றுமதிப் பயிரான சித்திரநெல்லா பயிரிடும் மாவட்டம் -D, E,F

iii. மீன்கள் அதிகளவில் காணப்படும் பேதுறு கடலடித்தள மேடை -G,H,I


iv. நெல் ஏற்றுமதிக் கிராமமான பொலநறுவை - J, K,L

v. மன்னார்த் தீவு -M,N,O

(5X1=5புள்ளிகள்)

## பகுதி II

2) புவியின் அமைப்பை விளக்கும் படத்தில் புவியின் உள்ளமைப்பின் பிரிவுகள் காட்டப் பட்டுள்ளது.




i. புவியின் அமைப்பில் A,C, என்ற படைகளின் பெயரை முறையே தருக? (2 புள்ளிகள்)

ii. C படையின் விசேட அம்சங்கள் **மூன்று** தருக? (3 புள்ளிகள்)

iii. (a) B படையையும் C படையையும் பிரிக்கும் எல்லையைப் பெயரிடுக? (1 புள்ளி)

(b) A படையின் உப பிரிவுகளைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றை** விளக்குக? (4 புள்ளிகள்)

3)

i. குறிப்பிட்ட ஒரு வகைக் காலநிலையைத் தீர்மானிக்கும் **இரு** காரணிகளைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

ii. (a) உலகின் காலநிலைப் பரம்பல் பற்றிய கருத்தினை முதன் முதலில் முன்வைத்தவர் யார்? (1 புள்ளி)

(b) பூகோள மட்டத்திலான காலநிலைப் பாகுபாட்டை வெளியிட்ட **இரண்டு** அறிஞர்களைத் தருக? (2 புள்ளிகள்)

iii. (a) உலகின் பிரதான காலநிலை வலயங்கள் **மூன்றின்** பெயரைத் தருக? (3 புள்ளிகள்)

(b) நீர் குறிப்பிட்ட காலநிலை வலயங்களுள் ஒன்றின் விசேட பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)



( பக்கம் 10 ஐப் பார்க்கவும்)

➢ **4ஆம் வினாவிற்கு விடையளிப்பதற்கு தரப்பட்டுள்ள உலகப் படத்தினைப் பயன்படுத்துக**

4)

i. உலகில் கோதுமையைப் பயிரிடும் முதன்மையான நாடுகள் **A,B** என்பனவாகும். அவற்றின் பெயர்களை முறையே தருக? (2புள்ளிகள்)

ii. (a) கோதுமைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பௌதிகக் காரணிகள் **இரண்டு** தருக? (2 புள்ளிகள்)

(b) கோதுமை உற்பத்திக்கு அவசியமான மானிடக்காரணி **ஒன்று** தருக? (1 புள்ளிகள்)

iii. கோதுமைப் பயிர்ச் செய்கையின் விசேட பண்புகள் **மூன்றைக்** குறிப்பிட்டு ஒன்றை விளக்குக? (5 புள்ளிகள்)




➢ **5ஆம் 6ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைப் பயன்படுத்துக**

5)

i. இலங்கையில் இறப்பர் பயிரிடும் பிரதேசங்கள் **A,B,C,D,E** என்பனவாகும் அவற்றுள்

(a) மிகவும் செறிவாக இறப்பர் பயிரிடும் ஒரு மாவட்டத்தின் பெயர் தருக? (1புள்ளிகள்)


(b) சிறியளவில் இறப்பர் பயிரிடும் மாவட்டம் **ஒன்று** தருக? (1புள்ளிகள்)

ii. (a) பெருந்தோட்டப் பயிர்களின் ஆராய்ச்சி நிலையங்கள் இலக்கம் 1,2 என்பனவாகும் அவற்றின் பெயர்களை முறையே தருக? (2புள்ளிகள்)

(b) இறப்பர் பயிரின் வளர்ச்சிக்கு சாதகமான பௌதிகக்காரணி **ஒன்று** தருக? (1புள்ளி)

iii. (a) உலகில் இறப்பர் பயிர்ச் செய்கை நடைபெறும் பிரதானநாடுகள் **இரண்டு** தருக? (2புள்ளிகள்)

(b) உலகின் இறப்பர்ச் செய்கையின் விசேட பண்புகள் **இரண்டைக்** குறிப்பிட்டு **ஒன்றை** விளக்குக? (3புள்ளிகள்)






(பக்கம் 11 ஐப் பார்க்க)

6)

i. இலங்கையில் நன்னீர் மீன்பிடி நிலையங்கள் அமைந்துள்ள இடம் இலக்கம் 3,4 ஆகும். அவற்றின் பெயர்களை முறையே தருக? (2 புள்ளிகள்)


ii. (a) இலங்கையின் மீன்பிடித்துறைமுகங்கள் இலக்கம் 5, 6 இனால் குறிக்கப்பட்டுள்ளது. அவற்றின் பெயா்களை முறையே தருக? (2 புள்ளிகள்)

(b) இலங்கையில் மீன்பிடிக் கைத்தொழில் முக்கியத்துவம் பெற்றமைக்கான காரணம் **ஒன்று** தருக? (1 புள்ளி)

iii. (a) இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலின் விருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் **மூன்று** காரணிகளைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

(b) ஆழ்கடல் மீன்பிடிக் கைத்தொழிலின் சிறப்பியல்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

7)




i. வரிப்படத்தின் படி உலகில் இரும்புருக்கு உற்பத்தியில் முதன்மை வகிக்கும் **A,B** என்ற நாடுகளின் பெயர்களை முறையே தருக? (2 புள்ளிகள்)

ii. **A**என்ற நாட்டில் அமைந்துள்ள இரும்புருக்கு உற்பத்தி மையங்கள் **மூன்று** தருக?(3 புள்ளிகள்)

iii. (a) கைத்தொழிலை ஓரிடப்படுத்தும் மானிடக்காரணிகள் **இரண்டு** தருக? (2 புள்ளிகள்)

(b) இரும்புருக்குக்கைத்தொழிலின் புதிய போக்குகள் **இரண்டைக்**குறிப்பிட்டு **ஒன்றை** விளக்குக? (3 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்

## இரண்டாம் தவணைப்பரீட்சை – 2019

**தரம் - 10** **புவியியல் I,II விடைகள்** **புள்ளித்திட்டம்**

### புவியியல் - I

| | | | |
|---|---|---|---|
| 1. 20-30 | 11. பி | 21. பருத்தி | 31. 3 |
| 2. கருங்கல் | 12. ச | 22. பிறேசில் | 32. 2 |
| 3. ஆசியா | 13. ச | 23. ரன்ன | 33. 3 |
| 4. சீனக்கடல் | 14. பி | 24. நைதரசன் | 34. 3 |
| 5. கோதுமை | 15. ச | 25. சீனா | 35. 1 |
| 6. பாற்பண்ணைகள் | 16. 1 | 26. D | 36. 4 |
| 7. இறப்பர் | 17. 3 | 27. A | 37. 2 |
| 8. வவுனியா | 18. 4 | 28. மாத்தளை | 38. 3 |
| 9. சீனா | 19. 2 | 29. C | 39. 4 |
| 10. 92 | 20. 4 | 30. E | 40. 2 |

(1× 40 =40புள்ளிகள்)

### புவியியல் - II

1. (அ)

i. அளவுத்திட்டம்
ii. சுவடு
iii. சமஆழக்கோடு
iv. குத்துச்சாய்வு
v. Y
vi. தாழ்கணவாய்
vii. P
viii. படத்தின் இலக்கம்
ix. கூம்புக்குன்று
x. 2cm

(1× 10 =10புள்ளிகள்)

(ஆ)

i. B ii. E iii. G iv. K v. O

(1× 5 =5 புள்ளிகள்)

(இ)

i. B ii. E iii. H iv. L v. M

(1× 5 =5புள்ளிகள்)

2.

i. A - ஓடு, C - மையம் (2 புள்ளிகள்)

ii.

- புவியின் மூடியின் கீழ் அமைந்துள்ள பகுதியாகும்
- சேர்க்கையின் அடிப்படையில் மையமானது வெளிமையம், உள்மையம், என இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- வெளிமையம் திரவ உலோகங்களால் (நிக்கல், இரும்பு) ஆனது இந்தப்பகுதி மூடியிலிருந்து 2250km வரையும் விரிவடைந்துள்ளது.
- உள்மையம் தடிப்பான உலோகப்படையைக் கொண்டுள்ளது. இப்படை வெளிமையத்தில் இருந்து 1220km ஆழம் வரை விரிவடைந்துள்ளது.

எவையேனும் மூன்றைக்குறிப்பிட்டால் (3 புள்ளிகள்)

(பக்கம் 2 ஐப் பார்க்க)

iii. (a) கூட்டன்பேர்க் தொடர்ச்சியின்மை (1 புள்ளி)
(b) கண்டஓடு, சமுத்திரஓடு (இரண்டினையும் குறிப்பிட்டால் 1 புள்ளி)

கண்ட ஓடு - இது கருங்கல், பாறைகளைக் கொண்டுள்ளது இது சீயல் (Sial) படை என அழைக்கப்படுகின்றது. இது சிலிக்கனையும், அலுமினியத்தையும் கொண்டுள்ளது.

சமுத்திர ஓடு - பசோல்ட் பாறைகளைக் கொண்டுள்ளது இந்தப்படையானது முதன் நிலையில் சிலிக்காவையும் மக்னீசியத்தையும் கொண்டிருப்பதால் சீமாப்படை (Sima) என அழைக்கப்படுகின்றது

இரண்டில் ஒன்றினை விளக்கி இருந்தால் (3 புள்ளிகள்)

3.

i. வெப்பநிலை, மழைவீழ்ச்சி அல்லது மழைப்பருவம் (இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii. (a) அரிஸ்ரோட்டில் (1 புள்ளி)
(b) ஒஸ்ரின் மில்லா், தோண்வைற், கெப்பன் (இருவரைக்குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

iii. (a) அயனவெப்பவலயம் (Tropical zone) வெப்பவலயம் (Temperate zone), முனைவு வலயம், அல்லது கடுங்குளிர் வலயம்.(Frigid Zone)

(மூன்றினையும் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

(b) மூன்று காலநிலை வலயங்களிலும் இரண்டு விடயங்களை எழுதி இருந்தால் 2 புள்ளிகள்
உ-ம் - அயனக்காலநிலை வலயம்

- வட அகலக்கோட்டில் கடகக்கோட்டிற்கும் ($23½^0$ ) தென் அகலக்கோட்டின் மகரக்கோட்டிற்கும் ($23\ ½^0$) இடையில் அமைவு பெற்றுள்ளது.
- விசேட காலநிலை அம்சமாக மொன்சூன் காணப்படுதல்.

(இதேபோன்று ஏனைய காலநிலை வலயங்களிலும் இரண்டு விடயங்களைக் குறிப்பிடல் வேண்டும்.)

4.

i. A- இந்தியா, B- சீனா (இரண்டினையும் குறிப்பிட்டால்) (2 புள்ளிகள்)

ii. (a)

- 300-500 மில்லி மீற்றருக்கு இடையிலான மழைவீழ்ச்சி
- சேணாசம மண்
- பயிர் வளருகின்ற காலத்தில் காணப்படும் குளிர்ச்சியான ஈரக்காலநிலை
- நன்கு நீர் வடிந்து செல்லும் தட்டையான நிலம்

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

(b) களைகொல்லிகள், விவசாய இரசாயனங்கள், புதிய வகை விதைஇனங்கள், இயந்திரப் பாவனை, போதுமான மூலதனம், நவீனதொழில்நுட்பம்

(எவையேனும் ஒன்றினைக் குறிப்பிட்டால் 1 புள்ளி)

iii. தலா ஒருவருக்கான விளைச்சல் அதிகம், பரந்தளவில் நிலங்களில் பயிர் செய்யப்படுதல், நவீன தொழில்நுட்பப்பயன்பாடு, உலகம் முழுவதும் சந்தை உள்ளமை, பாரிய அளவு இயந்திரப்பயன்பாடு, பல்வேறு வகையான உணவு உற்பத்திகளின் நுகர்வு

(மூன்றினைக்குறிப்பிட்டு ஒன்றை விளக்கினால் 5 புள்ளிகள்)

(பக்கம் 3 ஐப் பார்க்க)

5.

i. **(a) A**- கேகாலை, **B**- இரத்தினபுரி, **C**- களுத்துறை (இவற்றில் ஒன்று எழுதி இருந்தால் 1 புள்ளி)
**(b) D**- பதுளை, **E-** மொனராகலை (இவற்றில் ஒன்று எழுதி இருந்தால் 1 புள்ளி)

**ii. (a)** 1- அகலவத்தை (இறப்பர்), 2- தலவாக்கலை (தேயிலை) (இரண்டினையும் குறிப்பிட்டால 2 புள்ளிகள்)

**(b)**

- செம்பூரான்மண், 300m குறைந்த மென்சாய்வுநிலம்
- $27^0C$ சராசரி வெப்பநிலை
- வருடாந்த மழைவீழ்ச்சி 2000**mm** மேல் இருத்தல்
- பயிற்றப்பட்ட தொழிலாளர், போக்குவரத்து வசதிகள், சர்வதேச சந்தை, உள்ளடக்கச்சந்தை

(எவையேனும் ஒன்றைக்குறிப்பிட்டால் 1 புள்ளி)

iii. (a) தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, இந்தியா, வியட்னாம், சீனா, இலங்கை
(இரண்டினைக்குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

(b) புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தல், ஊழியச்செறிவான பயிர்ச் செய்கை, பாரியதோட்டங்களில் பயிர் செய்யப்படுகின்றமை, இறப்பர் மூலப்பொருளுக்கான கேள்வி அதிகரித்தல், செயற்கை இறப்பருடனான சந்தைப்போட்டி, (இரண்டினைக்குறிப்பிட்டு ஒன்றை விளக்கினால் 3 புள்ளிகள்)

6.

i. 3 - பொலன்நறுவை, 4 – பதவியா (இரண்டினையும் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii. (a) 5 - மயிலிட்டி, 6 – பேருவளை (இரண்டினையும் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

(b) புரத உணவு கிடைக்கின்றமை, சந்தை வாய்ப்பு உள்ளமை, வேலைவாய்ப்புத் தருகின்றமை, அந்நியச்செலவாணி கிடைத்தல், (இவற்றுள் ஒன்றைக் குறிப்பிட்டால் 1 புள்ளி)

iii. (a) இலங்கை தீவாக இருக்கின்றமை
தீவைச்சுற்றி நீண்ட கடற்கரை உள்ளமை
பரந்த கண்டமேடை உள்ளமை
குடாக்கள், கடல்நீரேரிகள், துறைமுகங்கள் காணப்படுகின்றமை
ஆறுகள், குளங்கள், நீர்த்தேக்கங்கள் காணப்படுகின்றமை
பருவக்காற்றுக்காலங்களில் ஏற்படுகின்ற நீரோட்டங்களின் செயற்பாட்டினால் மீன்களுக்கான பிளான்ரன் உணவு அதிகமாக கிடைக்கின்றன.

(மூன்றினைக்குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

(b) பெரிய கடல்சார் மீன்கள் உள்ளமை, தனியார்முயற்சிகள் மற்றும் அரசஆதரவுடன் ஆழ்கடல் மீன்பிடி மேற்கொள்ளப்படுகின்றமை, பல்வேறு மீன்பிடி முறைமைகள் மீன்பிடிக்கு உபயோகித்தல்.
(இரண்டினைக்குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

7.

i. A - சீனா, B- யப்பான் (இரண்டினையும் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii. மஞ்சூரியா, பீஜிங், சான்சிங்வான் (மூன்றினையும் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

iii. (a) மூலதனம், சந்தை, போக்குவரத்து, உழைப்பு, அரசகொள்கை (இரண்டைக்குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

(b) கிழக்காசிய நாடுகளில் இருந்து புதிய சந்தை உருவாகியுள்ளமை
இரும்பை உருக்க நிலக்கரிக்குப்பதிலாக மாற்று சக்தி பயன்படுத்தப்படுகின்றமை.
பாரம்பரிய உற்பத்திகளில் இருந்து விலகி உற்பத்திகள் நவீன மயப்படுப்பட்டுள்ளது
இன்று இருப்புருக்கு கைத்தொழில் அமைவிடத்தில் மூலதனம், சந்தை ஆகிய காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றமை.
அபிவிருத்தியுடன் பல்வேறு இலத்திரனியல், தொழில்நுட்பப் பயன்பாடுகள் அதிகரித்தமை
குறிப்பிட்ட நாடுகள் வர்த்தகத்தில் உருக்கை ஏற்றுமதி செய்யும் அதே நேரம், உருக்கை இறக்குமதியும் செய்கின்றமை (சீனா, தென்கொரியா

யாதாயினும் இரண்டைக்குறிப்பிட்டு ஒன்றை விளக்கினால் (3 புள்ளிகள்)